**OS.NO. 49/2022      PW-1**

நாள் : 30.06.2025

பெயர் : சாந்தி

க/பெ : ஸ்ரீராமலு

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சர்வே எண் 134/1பி தெருவாக உள்ளது என்றால் அது எனக்கு புரியாது. எனது மொத்த 109 செண்ட் நிலம் அதில் 10 செண்ட் ஊருக்கு கொடுத்துள்ளேன் மீதம் உள்ள 99 செண்டிற்காக வழக்கு தொடுத்துள்ளேன். ஊருக்கு கொடுத்துள்ளதாக கூறும் 10 செண்ட் நிலத்திற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்றத்திலிருந்து சர்வேயருடன் நீதிமன்ற ஆணையர் நிலத்தை அளந்து சென்றார் என்றால் சரிதான் ஆனால் அவர் தாக்கல் செய்த அறிக்கை சரியில்லை. வேறு ஒரு ஆணையரை நியமிக்கும்மாறு மனுவின் பேரில் முந்தைய ஆணையரின் அறிக்கையின் மேல் ஆட்சேபனை செய்து மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மற்றொரு ஆணையர் நியமித்து Revisit கோரிய மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும் அதன் பேரில் நாங்கள் மேல்முறையீடு செல்லவில்லை என்றாலும் சரிதான்.

நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் சர்வே எண் 134/1எ வில் அரசு தரப்பில் BDO மற்றும் ஊர்தலைவர் எந்த வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது தெருவானது சர்வே எண் 134/1பி அமைந்துள்ளது என்றும் தெளிவாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அந்த அறிக்கையின் மேல் சந்தேகம் உள்ளது. இந்த வழக்கு அனுமானத்தின் பேரில் தாக்கல் செய்துள்ளதால் அது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் கேட்காமல் உறுத்துக்கட்டளை

பரிகாரம் மட்டும் கேட்க இயலாது என்றால் சரியல்ல. உரிமையே இல்லாத சர்வே எண் 134/1பி வில் உள்ள  ரோடு 134/1எ வில் உள்ளதாக தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆகவே இவ்வழக்கில் முகாந்திரம் இல்லை என்றாலும் தள்ளுபடிக்குரியது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் சர்வே எண் 134/1பி க்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA Digitally signed by SADASIVAM POORNIMA

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.